# பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறை

# Ancient Tamil's Way of Life

***முனைவர் ந. தர்மராஜ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
செயின் ஜோசப் கலை அறிவியல் கல்லூரி
சென்னை, இந்தியா

**Dr. N. Dharmaraj**
*Assistant Professor, Department of Tamil*
*St. Joseph's Arts Science College*
*Chennai, India*

## *ஆய்வுச் சுருக்கம்*

*தமிழிலக்கிய வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு காலங்களைச் சங்க காலம் முதலாக வகுத்தல் போல, தமிழ் மக்கள் சிந்தனையை ஆதாரமாகக் கொண்டு காலத்தைப் பிரித்தால் சங்க காலம் என வழங்கும் காலப் பிரிவை இயற்கை நெறிக் காலம் எனலாம் என்று ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார். சங்க காலத்தில் வாழ்ந்த மக்களும் புலவர்களும்; இயற்கையோடு இயைந்து வாழ்க்கையே வாழ்ந்தனர். பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த இயற்கை வாழ்க்கை முறைகள் பற்றி இக்கட்டுரை கூற விழைகின்கிறது.*

## Abstract

*A. Velupillai mentions that the based on the Tamil people's thought, Sangam period can called as the period of nature. People and poets who lived in the Sangam period, they lived in harmony with nature. This article tries to tell about the natural ways of life lived by the ancient Tamils.*

**Citation**

Dharmaraj, N. "Ancient Tamil's Way of Life." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 28–32.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20069413*

**துயிலெழுதல்**

*பண்டைத் தமிழர்கள் வைகறைப் பொழுதில் சூரியன் உதிப்பதற்கு முன்னதாகவே அனைவரும் துயில் நீக்கி எழுவர். இவர்கள் விழிப்புறுவதற்குச் சேவலின் கூவலும் பிற பறவைகளின் ஒலியும்; உதவின என்பதை*

***"ஒண்பொறிச் சேவல் எழுப்ப ஏற்றெழுந்து"*** *(புற.;-38)*

*என்று குறிப்பிடுகின்றது. மேலும் விடியற் காலத்தில் கீழ்த் திசையில் தோன்றும் விடிவெள்ளியும் அவற்றின் ஒலியும்; விழிப்புறுவதற்கு உதவி செய்தன.*

**நீராடுதல்**

***நீராடுதல் ப;ற்றி தொல்காப்பியப் பொருளதிகாரம்***

***"யாறும் குளனும்காவும் ஆடிப்***

***பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப"*** *(தொ.1137)*

*என்று பண்டைத் தமிழர்கள் சுனை, ஆறு குளம் முதலானவற்றில் நீராடியதைப் பற்றி குறிப்பிடுகின்றது.*

*ஆழ்ந்த நீருடைய பெரிய சுனையில் சுற்றத்தாரோடு நீராடுவதைப் பற்றி அகநானூறு*

***"நீடுநீர் நெடுஞ ;சுனை ஆயமொடு"*** *(அகம்-358)*

*என்று குறிப்பிடுகின்றது.*

**எண்ணெய் தேய்த்துக் குளித்தல்**

*சங்ககாலத் தமிழகத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளோடு இயைந்த ஒருவகைப் பழக்கமாக இருந்தது. இன்றும் இப்பழக்கம் இருந்து வருகின்றது.*

*கதிரவனின் வெப்பத்தால் உண்டாகும் தாக்குதலால் உடலின் தோல் நைந்து விடா வண்ணம் காப்பதற்கு உடல் முழுவதும் எண்ணெய் பூசி ஊற வைத்து குளித்தனர். குழந்தையைப் பெ;றெடுத்த தாய்மார்கள் குறிப்பிட்ட சில நாள்கள் கழிந்த பிறகு எண்ணெய் நீராட்டுதல் சிறப்பான வழக்கமாக இருந்தது. போருக்குப் புறப்;படும் பொழுதும் திரும்பி வந்த பிறகும் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதற்கு முன்பும் ஆடவரும் பெண்டிரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும் வழக்கமாக இருந்தது. போருக்குப் புறப்படும் முன் ஒரு தாய் தன் மகனுக்கு எண்ணெய் தேய்த்ததைப் பற்றி,*

***"பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி"*** *(புற 279)*

*என்று குறிப்பிடுகின்றது.*

**இயற்கை மருந்து**

*பண்டைத் தமிழர்கள் அக்காலத்தில் ஒரு இயற்கை மருந்தாக, நோய்த்தடுப்பு காரணியாக வேம்பைப் பயன்படுத்தினர்.*

***"தீம்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ"*** *(புறம ;28)*

*புண்ணுற்றோரைப் பேய்கள் வந்து தொடாதவாறு காத்தற்கு இரவ மரத்தின் தழையையும் வேப்ப மரத்தின் தழையையும் வீட்டில் செருகி வைப்பது வழக்கமாக இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம். மேலும் வேப்பம் பூவை தலையில் மாலையாக அணிந்துள்ளமைப் பற்றி,*

***"வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு" (நெடு-176)***

*என்று நெடுநல்வாடை குறிப்பிடுகின்றது.*

**நிலத்தடி நீர்**

*"புறத்தூய்மை நீரான் அமையும்;" என்கின்றார் வள்ளுவர். அக்கால மக்கள் தூய்மையான நீரைப் பயன்படுத்தினர். அதுவும் நிலத்தடி நீரைத் தூய்மைப் படுத்திப் பயன்படுத்தினர் என்பதை,*

***"பூவற் படுவில் கூவல் தோண்டிய***
***செங்கண் சிறுநீர் பெய்த சீறில்***
***முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி***
***யாம் கஃடு உண்டென வறிறி மாசு இன்று" (புறம்;-319)***

*என்று குறிப்பிடுகின்றது.*

*அதாவது, செம்மண் நிலத்தில் அமைந்த மடுவில் கிணற்றைத் தோண்டுதலால் உண்டாக்கிய சிவந்த இடத்திலிருந்து பெறப்பட்ட சிலவாகிய நீரைச் சிறப்பில்லா இல்லத்தின் முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள பழமை வாய்ந்த அகன்ற வாயினையுடைய சாடியில் பெய்து வைத்திருப்பார். அந்நீரினைத் தெளியச் செய்வதற்;காக கடுக்காயை இடுவர். அதன் மாசு அகலும்;.*

*மேலும், மகளிர் தினமும் மண் பானையில் ஊருணியில் இருந்து நீர் எடுத்து வந்து அதனை தேற்றா விதைகள் கொண்டு தெளியச்செய்வர்.*

*இதனை,*

***"கலஞ்சினை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்***
***கலங்கிய நீர்போல் தெளிந்த்" (கலி-142)***

*என்று குறிப்பிடுகின்றது.*

**மலர்கள்**

*இயற்கையோடு இயைந்த வாழ்;க்கை வாழ்ந்த பண்டைத் தமிழர்களின் உள்ளத்;தை வண்ண மலர்கள் பெரிதும் கவர்ந்தன. அவற்றை அணிந்தும் மகிழ்ந்தனர். காதல் வாழ்க்கை போர் வழிபாடு முதலியவற்றில் ஒருவகைக் குறியீட்டுப் பொருளாகவும் கலையுணர்வை வெளிப்படுத்தும் ஒருவகைச் சின்னமாகவும் மலர்களைப்; பயன்படுத்தி உள்ளனர். ஆடவரும் மகளிரும் மலர்களைத் தலை முடியில் சூடி மகிழ்ந்தனர். குழந்தைகளுக்கும் மலர் அணிவிக்கப்பட்டது. மலர்களை மாலையாகவும; அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். மலர்களை ஆடையாகவும் அணிந்துள்ளமை பற்றியும்; அறிய முடிகின்றது.*

*பொருள் தேடுவதற்காக வெளிநாட்டிற்குச் செல்ல எண்ணியதை ஒருவன் குறிப்பாக மனைவிக்குத் தெரிவித்திருந்தான். ஒரு நாள் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்து மனைவியிடம் விடைபெற வந்தான். அவள் உள்ளமோ அமைதி இழந்து கலங்கியது. வறண்ட காலை வழியைக் கடந்து பொருள் தேடப் பிரிந்து செல்வீரானால் அந்தச் செயல் அறம் அன்று என்ற கருத்தைப் புலப்படுத்துவது போல் அவளது முகக் குறிப்பு இருந்தது.*

*ஓவியம் ஒரு நிலையாக நின்று உறுதிபெற புலப்படுத்தும் செய்திபோல் அந்த ஒரு கருத்தைத் தெளிவுற நினைந்து நின்றாள். கண்களில் நீர் அரும்பியது. நீர் நிரம்பிய கண்களோடு தன் மார்பில் இருந்த மகனை நோக்கினாள். அப்பொழுது,*

***"தூநீர் பயந்த துணையமை பிணையல்***
***மோயினள் உயர்த்;த காலை மாமலர்***
***மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம;" (அக.5)***

*தலைகுனிந்து தன் குழந்தையில் தலையில் உள்ள செங்கழுநீர் மாலையை முகர்ந்தாள். அப்போது அவள் விட்ட பெருமூச்சின் வெப்பம்; மலரை வாடச் செய்தது. மலர் வாடி அழகு இழந்ததைக் கண்டான் கணவன். மனைவியைப் பிரிந்து செல்லும் முயற்சியைக் கைவிட்டான். உடன் உள்ளபோதே இவ்வாறு வருந்துகின்றவன் பிரிந்து செல்வோமாயின் உயிர்வாழ்தல அரிதே" என்று எண்ணி தன் பயணத்தை நிறுத்தினான். இவ்வாறு துயரத்தினையும் மகிழ்ச்சியினையும் தூய்மையினையும் குறிக்கோளையும் வெளிப்படுத்தும் சின்னமாக மலர்கள் விளங்கியமையை உணரலாம்.*

**இயற்கை உணவுகள்**

*இயற்கையில் விளைந்த குப்பைக்கீரை, வேளைக்கீரை, வள்ளைக்கீரை, பாகற்காய் போன்றவற்றை நன்றாக வேகவைத்து உண்டனர் என்பதை.*

***"செறுவின் வள்ளைஇ சிறுகொடிப் பாகல்" (புற 399)***

*என்று குறிப்பிடுகின்றது.*

*மேலும்,*

***"குப்பைக்கீரை கொய்கண் அசைத்த" (புற 399)***

*குப்பையில் விளைந்த கீரையின் முற்றாத இளந்தளிரைப் பறித்து வந்து உண்டனர்.*

**ஊறுகாய்**

*நெடிய மாமரத்;தினது நறிய வடுவினைப் பல நாளாகப் போட்டு வைத்த ஊறுகாயை உண்டனர் என்பதை.*

***"நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த***
***தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவீர்" (பெரும். 309)***

*என்று அறிய முடிகின்றது.*

**உணவு செரிப்பது**

*பண்டைத் தமிழர்கள் தாங்கள் உண்ட உணவு செரிப்பதற்கு வெற்றிலைப் பாக்கைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை*

***தையால்! தம்பலம் தின்றியோ?***
***என்று தன் பக்கு அழித்து" கொண்டு"***
***எனத் தரலும் - யாறு ஒன்றும்;" (கலி.65)***

*இதன் மூலம் அறியலாம்.*

*மேலும் ஐந்து வகை மணப் பொருளுடன் (தக்கோலம், தீம்பூத்தகைசால், இலவங்கம், கற்பூரம், சாதியோடைந்து) கூடிய பாக்கினை வாயில் இட்டு மெல்லுவது வழக்கமாக இருந்துள்ளது.*

**முடிவு**

*சங்ககாலத் தமிழகம்; இயற்கை வளங்கள் நிரம்பியதாக இருந்தது. அதனால், மக்கள்; இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை வாழ்ந்தனர். மேலும், அக்கால மக்கள் இயல்பாகவும்*

*எளிமையாகவும் வாழ்;ந்தனர். ஆனால், நாம் இன்று ஆடம்பரமாக வாழ வேண்டும்; என்ற எண்;ணத்தில் இயற்கையை அழித்து வருகின்றோம். நாகரிக வாழ்;க்கைக்காக நமக்கு நாமே கேடுகளையும் உருவாக்கிக் கொள்கின்றோம். அதனால், புவி வெப்பமடைந்து பல்வேறு விதமான இயற்கைச் சீற்றங்களை விளைவித்துக் கொண்டிருக்கிறது. மக்களாகிய நாம் அனைவரும் பண்டைத் தமிழர்கள் வாழ்;ந்த இயற்கையான வாழ்;க்கை வாழ வேண்டும். இயற்கையைக் காப்போம்! வளம் பெறுவோம்!*

**துணைநூல்கள்**


1. *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஆ.வேலுப்பிள்ளை.*
2. *பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சாமி. சிதம்பரனார்.*
3. *சங்கத் தமிழர் வாழ்வியல், முனைவர் ச.வே.சுப்பிரமணியன்.*
4. *தமிழ்ப் பண்பாடு, க.த.திருநாவுக்கரசு.*
5. *சுற்றுச் சூழல் நோக்கில் சங்கத் தமிழகம், முனைவர் மகிழேந்தி.*
6. *ஓவச் செய்தி, டாக்டர் மு.வ.*
7. *தொல்காப்பியம் தெளிவுரை, முனைவர் ச.வே.சுப்பிரமணியன்.*
8. *நெடுநல்வாடை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு.*


## References


1. Time and Concept in Tamil Literature, A. Velupillai
2. Palandamizhar Life and Development, Sami. Chidambaram
3. Sangath Tamil Life, Dr. S. V. Subramanian
4. Tamil culture, K.T.Thirunavukkarasu
5. Sangha Tamil Nadu Towards Environment, Dr. Mahijendi
6. Ovach message, Dr. M.V.
7. Tholkappiyam Exposition, Dr. S. V. Subramanian
8. Nedunalwadai, New Century Book House Publication.